திரு. என். கே. பழனிசாமி : அக்டோபர் மாதத்தில் ஒரே நாளில் மட்டும் 2,500 பேர் விழுப்புரத்திலிருந்து சென்னை வந்தவர்களை சர்க்கார் கைது செய்தார்கள் என்று பத்திரிகைகளில் செய்தியைப் பார்த்தோம். 2,500 பேர்களுக்கும் பின்னர் புனர்வாழ்வு அளிக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : சில செய்திகள் மிகவும் மிகைப் படுத்துகின்றன. செயற்கைப் பட்டைப் பொறுத்த அளவில் நாடு முழுவதும் ஏற்பட்ட பற்றாக்குறை நமக்குத் தெரியும். தமிழ் நாட்டில் தேவையான உற்பத்தி இல்லை. வெளி மாநிலங்களிலிருந்து நமக்கு வரவேண்டிய நிலை இருக்கிறது. ஆகவே, சின்னாளப்பட்டியில் இப்படிப்பட்ட நிகழ்ச்சி நடை பெற்றது. உடனே மாவட்ட ஆட்சித் தலைவர் அங்கே சென்று அவர் களுக்கு உதவி செய்ய ஏற்பாடு செய்தார்கள்.

Art Silk Ribbon Industry

*699 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether it is a fact that the Art Silk Ribbon Manufacturing Industries at Komarapalayam are facing crisis as a result of the increasing prices of art silk ; and

(*b*) if so, the steps taken to meet the situation ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) செயற்கைப் பட்டின் நடப்பு விலையில் உயர்வு மட்டுமின்றி, ரிப்பன் தயாரிப்பாளர்களுக்கு ஒதுக்கப்பட்ட அளவு குறைக்கப்பட்டதாலும், குமாரபாளையத்தில் செயற்கைப் பட்டு ரிப்பன் தொழிலில் நெருக்கடி நிலை ஏற்பட்டிருக்கிறது.

(இ) 1973–74ஆம் ஆண்டில் தமிழ்நாடு வட்டாரக் குழுவிடமிருந்து கட்டுப்பாடான விலையில் 3,000 கிலோகிராம் செயற்கைப் பட்டு குமாரபாளையத் திலுள்ள ரிப்பன் தயாரிப்பாளர் சங்கங்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது.

திரு. என். டென்னிஸ் : இதன் மூலமாக எத்தனை பேர் வேலை இழந்து இருக்கிறார்கள், அவர்களுடைய வேலை பாதிக்கப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : வேலை பாதிக்கப்பட்டிருப்பதாகத் தகவல் இல்லை.

திரு. குப்பல் கே. எஸ். இராமகிருஷ்ணன் : செயற்கைப் பட்டு இந்த மாநிலத்திற்குப் போதிய அளவு கிடைக்கவில்லை என்ற காரணத்தினால் நெசவாளர்கள்மற்ற தொழிலில் ஈடுபடுகிற அளவுக்குக் கஷ்டமாக இருக்கிறது.

1974 மார்ச் 30]

செயற்கைப் பட்டு தொழிற்சாலை ஒன்றை நம்முடைய மாநிலத்திலேயே கோவாபரேடிவ் அடிப்படையில் உண்டாக்குவது பற்றி அரசு ஆலோசனையில் ஏதாவது இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அப்படிப்பட்ட யோசனை இருக்கிறது ஆனால் இப்பொழுது இடைக்காலத்தில் இந்த நூல் விநியோகத்தை பம்பாயில் உள்ள உற்பத்தியாளர்களும் மில் முதலாளிகளும் மாஸ்ர் வீவர்ஸ் என்ற பெயரில் வியாபாரிகளுடன் சேர்ந்து நடத்துகிற ஒரு முறையை மாற்றி உண்மையான கைத்தறி நெசவாளர்களுக்குக் கொடுக்கின்ற ஒரு கோரிக்கையை நம்முடைய அரசு மத்திய அரசினிடம் வற்புறுத்தியிருக்கிறோம். நேற்று இதுபற்றி பேச்சுவார்த்தை இங்கே நடைபெற்றது. அந்த மில் அதிபர்களுடைய சங்கம் நம்முடைய மாநிலத்திற்குத் தேவையான நூலை நம்முடைய மாநிலத்திற்கே வந்து நாம் கொடுக்கின்ற அனைத்துக் கட்சிகளுடைய ஒத்துழைப்போடு கொடுக்கின்ற கார்டுகளின் அடிப்படையில் விநியோகிக்கக் கொள்கை அளவில் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள்.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : தலைவர் அவர்களே, செயற்கைப் பட்டைக் கொண்டு ரிப்பன் செய்வது ஒரு சிறிய தொழில்தான். அதிகமாக சேலை போன்றவைகள்தான் தயாரிக்கப்படுகின்றன. உதாரணமாக சேலம், சின்னாளப்பட்டி, மதுரை, அருப்புக்கோட்டை ஆகிய இடங்களில் ஆர்ட் ஸில்க் மிகப் பெரிய கைத்தொழிலாக நடந்துகொண்டிருக்கிறது. கடந்த ஆண்டு செயற்கைப் பட்டு கிடைக்காத காரணத்தினால் மிகுந்த விலையேற்றம் ஏற்பட்டிருக்கிறது.

அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல் பம்பாயில் உள்ளவர்கள் இங்கே உள்ள மாஸ்டர் வீவர்களுக்கு நேரடியாகக் கொடுத்துவந்த காரணத்தினால் பெரிய ஊழல்கள் ஏற்பட்டு, அதனால் கைத்தறி நெசவாளர்கள் வேலை இழக்கும்படியான நிலை ஏற்பட்டிருக்கிறது. எதிர்காலத்தில் இம் மாதிரி பிரச்னையைச் சமாளிப்பதற்கும், ஆர்ட் ஸில்கின் விலையைக் குறைப்பதற்கும் தக்க நடவடிக்கைகளை அரசு எடுக்குமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மாண்புமிகு உறுப்பினர் கருத்து முற்றிலும் சரியான கருத்து ஆகும். இதனுடைய காரணம் இதுவரையில் இந்தத் திட்டத்தின் அடிப்படையில் நூல் விநியோகிக்கப்பட்ட பிரச்னைதான். இந்த விநியோகம் ஒரு ஒப்பந்தத்தின் அடிப்படையில் நடைபெற்றுக் கொண்டிருந்தது. அந்த ஒப்பந்தம் இங்கே உள்ள வியாபாரிகளுக்கும், நாட்டில் உள்ள வியாபாரிகளுக்கும் மில் முதலாளிகளுக்கும் ஏற்பட்ட ஒப்பந்தம். அந்த ஒப்பந்தம் கூடாது என்பது தான் மாநில அரசின் வாதம். நல்ல காலமாக இந்த மார்ச்சு மாதத்தோடு நாளையோடு இந்த ஒப்பந்தம் முடிவுறுகிறது. ஏப்ரல் மாதத்தில் வியாபாரிகளோடு ஒப்பந்தம் வைத்துக்கொண்டு கொடுக்கக்கூடாது, நேரிடையாக உபயோகப்

படுத்துகிறவர்களுக்கு நூலை வழங்கவேண்டும் என்று நாம் வற்புறுத்தி யிருக்கிறோம். நேற்று நடந்த பேச்சுவார்த்தைகளில் ஏற்றுக்கொண்டிருக் கிறார்கள். மகிழ்ச்சிகரமான செய்தியாகும்.

திரு. கே. என். குமாரசாமி : செயற்கைப் பட்டு நாலுக்கான கோட்டா வைப் பெற்றுக்கொள்கிற மாஸ்டர் வீவர்கள் அதை வெளியே விற்று விட்டு, அந்த பாக்டரியை நடத்துவதே இல்லை. பாக்டரி நடத்துவதாக அவர்கள் கோட்டா பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். இதை அரசு கண் காணித்து, அப்படி கோட்டா பெற்று தொழிற்சாலை நடத்தாமல் இருப்ப பவர்கள்மீது நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இந்தக் குறையை நீண்ட காலமாக இந்தப் பக்கத்திலிருந்து, அரசுத் தரப்பிலிருந்து இந்த மன்றத்தில் எடுத்துச் சொல்லியிருக்கிறேன். மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் இன்றைக்காவது அதை ஒப்புக்கொண்டதற்கு நன்றி.

திரு. த. சோனையா : செயற்கைப் பட்டு இல்லாத காரணத்தினால் நிறைய நெசவாளர்கள் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்த நெசவாளர்களின் அவதியைப் போக்குவதற்கு அரசாங்கமே இந்தப் பட்டுத் தயாரிப்பதற்கான தொழிற்சாலையை ஆரம்பிக்க செயற்குறிப்பு இருப்பதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அப்படியானால் நெசவாளர்கள் நிறைய இருக்கும் மதுரை மாவட்டத்தில் இந்தத் தொழிற்சாலையை ஆரம்பிப்பதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: எந்த இடம் என்பது பின்னாலே நிர்ணயிக்கப்படும்.

Radhapuram sub-taluk

***700 *Q.*—Thiru T. GANAPATHY : Will the Hon. the Minister for Revenue be pleased to state—**

(*a*) whether there is any proposal to upgrade the Radhapuram sub-taluk into a main taluk ; and

(*b*) if so, the headquarters proposed therefor ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :

(அ) ஆம், பரிசீலனையில் உள்ளது.

(இ) இது குறித்து தக்க தருணத்தில் முடிவெடுக்கப்படும்.